முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் II பரீட்சை – 2022 சனவரி**

# (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2022-03-19
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் செவ்வைநிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது (OTQs தவிர்ந்த). பரீட்சார்த்திகள் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

## நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *முதல்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றுக்கு எதிரே நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** கீழ்வரும் நிதிக்கூற்று மூலகங்களில் கம்பனியின் நிதி நிலை அளவீட்டுடன் நேரடியான தொடர்பைக் கொண்டது எது?

(1) செலவினங்கள் (2) வருமானம்

(3) சொத்துகள் (4) காசுப் பாய்வுகள் (02 புள்ளிகள்)

**1.2** **வரையறுக்கப்பட்ட மெக் கம்பனி** 2021 சனவரி 01 ஆந் திகதி ரூபா 3,000,000/- இற்கு மோட்டார் வாகனமொன்றை விற்பனை செய்துள்ளது. இந்த வாகனம் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 3,600,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மோட்டார் வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருப்பதுடன் மோட்டார் வாகனங்கள் கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன.

மேற்படி தகவல்களின் அடிப்படையில் மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் :

(1) ரூபா 1,560,000/-. (2) ரூபா 1,380,000/-.

(3) ரூபா 1,000,000/-. (4) ரூபா 800,000/-. (02 புள்ளிகள்)

**1.3** கீழ்வரும் கூற்றுகளைக் கவனத்தில் கொள்க :

**(a)** தனிச்சங்களை வைத்திருப்பவர்கள் கம்பனியின் உரிமையாண்மையை வைத்திருப்பவர்களாகக் கருதப்படுகின்றனர்.

**(b)** தனிச்சங்கள் திட்டவட்டமான நிலையான வட்டி வீதமொன்றைக் கொண்டிருக்கின்றன.

**(c)** தனிச்சங்களை வைத்திருப்பவர்கள் வாக்குரிமையைக் கொண்டிருப்பதில்லை.

மேலுள்ளவற்றுள் தனிச்சங்கள் (debentures) தொடர்பான சரியான கூற்று / கூற்றுகள் :

(1) **(b)** மாத்திரம்.
(2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (02 புள்ளிகள்)

**1.4** கீழ்வருவனவற்றுள் 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் ஏற்பாடுகள் தொடர்பில் சரியான கூற்று எது?

(1) பங்குடமையின் இலாப, நட்டமானது பங்காளர்களிடையே சமமாகப் பகிரப்பட வேண்டும்.

(2) பங்காளர்கள், தொழிற்படுத்திய மூலதனம் மீதான வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.

(3) புதிய பங்காளர் ஒருவரை, தற்போதுள்ள பங்காளர்களில் பெரும்பான்மையானோரின் சம்மதத்துடன் சேர்த்துக் கொள்ள முடியும்.

(4) பங்காளர்கள் பங்குடமை நடவடிக்கைகளின்போது மேற்கொண்ட செலவுகளை மீளப்பெற உரித்துடையவர்கள் அல்ல. (02 புள்ளிகள்)

**1.5** உற்பத்திக் கம்பனியொன்றின் 3 மாதங்களுக்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | **பாதிடப்பட்டது** | **உண்மையானது** |
|---|---:|---:|
| உற்பத்தி மேந்தலை (ரூபா) | 1,200,000 | 1,100,000 |
| இயந்திர மணித்தியாலங்களின் ண்ணிக்கை | 25,000 | 21,500 |

உற்பத்தி மேந்தலை :

(1) ரூபா 68,000/- இனால் மேலதிகமாக உறிஞ்சப்பட்டது.

(2) ரூபா 68,000/- இனால் குறைவாக உறிஞ்சப்பட்டது.

(3) ரூபா 168,000/- இனால் மேலதிகமாக உறிஞ்சப்பட்டது.

(4) ரூபா 168,000/- இனால் குறைவாக உறிஞ்சப்பட்டது.

(02 புள்ளிகள்)

***1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.6** சொத்து ஒன்றினை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்துவதற்கு நிறைவேற்றப்பட வேண்டிய இரண்டு (02) தேர்வு நிபந்தனைகளை (criteria) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.7** துண்டு வீத (piece rate) முறைமை ஒன்றின் மூன்று (03) அனுகூலங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.8** **ருவான்** மற்றும் **சமன்** ஆகியோர் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு பங்குடமை ஒன்றை நடத்திச் செல்கின்றனர். 2021 மார்ச் 31 இல் **வசந்த** என்பவர் ஒரு புதிய பங்காளராக பங்குடமையில் இணைந்து கொண்டார். **ருவான், சமன்** மற்றும் **வசந்த** ஆகியோரிடையேயான புதிய இலாப, நட்டப் பகிர்வு விகிதம் முறையே 2 : 1 : 3 ஆகும்.

அர்ப்பணிப்பு விகிதத்தைக் (sacrificing ratio) கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.9** LKAS 37 இன் பிரகாரம், ஏற்பாடு மற்றும் நிகழத்தக்க பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

**1.10** **ABC கம்பனியானது** முதல் உள்வருவதை முதலில் வெளியேற்றுதல் (FIFO) என்ற முறையைப் பயன்படுத்தி அதன் தொக்குகளை மதிப்பீடு செய்தது. கீழ்வரும் தகவல்கள் தொக்குகள் தொடர்பான கம்பனியின் பதிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| **திகதி** | **விபரம்** | **அலகு விலை (ரூபா)** | **அளவு (அலகுகளில்)** |
|---|---|---|---|
| 2022.01.01 | மீதி | 48 | 200 |
| 2022.01.10 | கொள்வனவுகள் | 50 | 300 |
| 2022.01.18 | விற்பனைகள் | - | 300 |
| 2022.01.22 | கொள்வனவுகள் | 49 | 200 |

2022 சனவரி 31 இலான தொக்கின் பெறுமதியைக் கணிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

கீழ்வரும் தகவல்கள், **தரு** என்பவருக்குச் சொந்தமான தனியுடமை வியாபாரமான **தரு டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **தரு டிரேடர்ஸின்** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) கீழ்வருமாறு :

| | வரவு (ரூபா) | | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| 2021 சனவரி 01 இல் மீதி மு.கொ.வ. | 100,000 | 2021 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணம் | 75,000 |
| வியாபார வருமதிகளிலிருந்தான பெறுவனவுகள் | 2,683,540 | வியாபார சென்மதிகளுக்கான கொடுப்பனவுகள் | 1,744,301 |
| | | வாடகை | 180,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 360,000 |
| | | மின்சாரம் | 27,000 |
| | | **தரு**வினால் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள் | 385,000 |
| | | வங்கிக் கட்டணங்கள் | 6,900 |
| | | 2021 டிசெம்பர் 31 இல் மீதி கீ.கொ.செ. | 5,339 |
| | **2,783,540** | | **2,783,540** |

(2) 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், வாடிக்கையாளர் ஒருவர் வர்ண வேறுபாடு காரணமாக ரூபா 125,000/- இற்கு கடனுக்கு கொள்வனவு செய்த பொருள்களைத் திருப்பி அனுப்பியிருந்ததுடன் **தரு**வும் அந்தப் பொருள்களின் திரும்பலை ஏற்றுக் கொண்டிருந்தார். எவ்வாறாயினும், இது கணக்கேடுகளில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(3) 2021 டிசெம்பர் 31 மற்றும் 2020 டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் சொத்துகள் மற்றும் பரிப்புகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன :

*(ரூபா)*

| | **2021 டிசெம்பர் 31 இல்** | **2020 டிசெம்பர் 31 இல்** |
|---|---|---|
| அலுவலக உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 725,000 | 700,000 |
| தொக்கு – கிரயத்தில் | 341,050 | 327,250 |
| வியாபார வருமதிகள் | 452,800 | 250,725 |
| வங்கியிலுள்ள காசு | 5,339 | 100,000 |
| வியாபார சென்மதிகள் | 320,458 | 150,475 |
| அட்டுறு மின்சாரம் | 7,000 | 16,000 |

***நீங்கள் செய்யவேண்டியது :***

2021 டிசெம்பர் 31 இலான **தரு டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

***ரஜித், மலித்*** மற்றும் ***உதித்*** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 1 : 2 : 2 என்ற விகிதத்தில் பகிரும் **RMU பங்காளர்கள்** என்ற பெயரில் பங்குடமை வியாபாரம் ஒன்றை நடத்திச் செல்கின்றனர்.

(1) பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றுக்கு வழிசெய்கிறது :

- ***மலித்*** ரூபா 35,000/- மாதாந்தச் சம்பளம் பெற உரித்துடையவர்.
- ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டிற்கு 6% மூலதனம் மீதான வட்டி செலுத்தப் படுகிறது.

(2) 2021 சனவரி 01 இல் பங்காளர்களின் மூலதன மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகள் கீழ்வருமாறு :

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனக் கணக்குகள்: | | |
| **ரஜித்** | | 3,000 |
| **மலித்** | | 6,000 |
| **உதித்** | | 6,000 |
| நடைமுறைக் கணக்குகள்: | | |
| **ரஜித்** | | 125 |
| **மலித்** | 560 | |
| **உதித்** | | 25 |

(3) 2021 டிசெம்பர் 31 இல் **மலித்** பங்குடமையிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்திருந்ததுடன் **ரஜித்** மற்றும் **உதித்** ஆகியோர் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு அதே வணிகப் பெயரின் கீழ் வியாபாரத்தைத் தொடர்ந்தும் நடத்திச்செல்லத் தீர்மானித்தனர்.

(4) 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **மலித்** இன் சம்பளம் தாக்கல் (charging) செய்யப்பட்டதன் பின்னரான பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 7,000,000/- ஆகும்.

(5) 2021 டிசெம்பர் 31 இல் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1,750,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் நன்மதிப்புக் கணக்கொன்றை உருவாக்காது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளின் ஊடாக அதனைச் சீராக்கம் செய்வதற்கும் இணங்கப்பட்டது.

(6) **RMU பங்காளர்கள்** என்ற பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துகள் 2021 டிசெம்பர் 31 இல் கீழ்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டன : *(ரூபா '000)*

| | கிரயம் | 2021 டிசெம்பர் 31 இல் திரள் தேய்மானம் | 2021 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| காணியும் கட்டடமும் | 8,000 | 1,500 | 8,000 |
| மோட்டார் வாகனங்கள் | 5,000 | 3,000 | 7,500 |

நடைமுறையல்லாச் சொத்துகளை பங்காளர்களின் கணக்கேடுகளில் மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் முன்கொண்டு செல்ல இணக்கம் காணப்பட்டது.

(7) **மலித்** இன் ஓய்வின்போது அவருக்குச் செலுத்த வேண்டிய தொகையை கடன் கணக்கொன்றிற்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **RMU பங்காளர்கள்** என்ற பங்குடமை வியாபாரத்தின் கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள். (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**ஹப்பி விளையாட்டுக் கழகம்** என்பது அதன் அங்கத்தவர்களுக்கு விளையாட்டுச் செயற்பாடுகளை வழங்குகின்ற அதே வேளை, அங்கத்தவர்களுக்கான உணவகம் ஒன்றையும் இயக்குகின்ற ஒரு விளையாட்டுக் கழகம் ஆகும். கீழ்வரும் தகவல்கள் **ஹப்பி விளையாட்டுக் கழகத்தின்** கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஹப்பி விளையாட்டுக் கழகத்தின்** கொள்ளல்களும் கொடுத்தல்களும் (Receipts and Payments) கீழ்வருமாறு :

| கொள்ளல்கள் | ரூபா | கொடுத்தல்கள் | ரூபா |
|---|---|---|---|
| உணவக விற்பனைகள் | 1,575,000 | சம்பளங்களும் கூலிகளும் | 1,500,000 |
| அங்கத்துவக் கட்டணம் | 2,250,000 | உணவகத்திற்கான கொள்வனவுகள் | 682,500 |
| விளையாட்டு மைதான வாடகை வருமானம் | 557,000 | கட்டட வாடகை | 350,000 |
| | | மின்சாரமும் நீரும் | 291,000 |
| | | விளையாட்டு மைதானப் பராமரிப்பு | 228,000 |
| | **4,382,000** | | **3,051,500** |

(2) *விளையாட்டுக் கழகத்தின் ஏனைய சொத்துகள் கீழ்வருமாறு :* *(ரூபா)*

| | **2021 டிசெம்பர் 31 இல்** | **2021 சனவரி 01 இல்** |
|---|---|---|
| தொக்கு – உணவகம் | 33,500 | 52,000 |
| விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 1,300,000 | 1,550,000 |
| உணவகத்திலுள்ள தளபாடங்கள் - முன்கொணரற் பெறுமதியில் | 300,000 | 325,000 |

(3) 2021 சனவரி 01 இல், எவ்வித அங்கத்துவக் கட்டண நிலுவைகளோ அல்லது முன்கூட்டியே பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணங்களோ இல்லை. மொத்தக் கழக அங்கத்தவர்களான 372 பேரில் 300 அங்கத்தவர்கள் மாத்திரமே 2021 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களைச் செலுத்தியுள்ளனர். அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 7,500/- ஆகும்.

(4) பின்வரும் செலவினங்கள் கீழ்வருமாறு உணவகத்திற்கு பகிரப்பட வேண்டும் :

| | |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 30 % |
| மின்சாரமும் நீரும் | 40 % |
| கட்டட வாடகை | 25 % |

(5) ஆண்டின் காலப்பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு எவ்வித சேர்த்தல்களோ அல்லது அகற்றல்களோ இல்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **ஹப்பி விளையாட்டுக் கழகத்தின்** கீழ்வருவன வற்றைத் **தயாரிக்குக** :

(a) உணவகத்தின் வருமானக் கூற்று (04 புள்ளிகள்)

(b) வருமான செலவினக் கணக்கு (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **வரையறுக்கப்பட்ட வின் (தனியார்) கம்பனியின்** ஊழியர்கள் வேலை மணித்தியாலங்களின் அடிப்படையில் அடிப்படைக் கூலியைப் பெறுகின்றனர். இதற்கு மேலதிகமாக, உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் சேமிக்கப்பட்ட நேரத்திற்கு மிகையூதியம் (Bonus) ஒன்றும் செலுத்தப்படுகிறது.

ஊழியர் ஒருவரின் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| வாரமொன்றிற்கான சாதாரண வேலை மணித்தியாலங்கள் | நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள். வாரமொன்றில் 5 வேலை நாட்கள் உள்ளன. |
| மணித்தியாலமொன்றிற்கான அடிப்படைக் கூலி வீதம் | ரூபா 275/- |
| அலகொன்றிற்கு அனுமதிக்கப்பட்ட நியம நேரம் | 12 நிமிடங்கள் |
| மிகையூதியம் | சேமிக்கப்பட்ட நேரத்திற்கு அடிப்படை கூலி வீதத்தில் 120 %. |
| கடந்த வாரத்தில் ஊழியரால் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 265 அலகுகள் |

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

**நீங்கள் செய்யவேண்டியது :**

கடந்த வாரத்திற்கான ஊழியரின் மொத்த உழைப்பைக் (earnings) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட பெலிக்ஸ் (தனியார்) கம்பனியின் பொருள் X** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| வருடாந்தக் கேள்வி | 4,000 அலகுகள் |
| அலகொன்றின் கொள்வனவு விலை | ரூபா 12,500/- |
| கட்டளையிடல் கிரயம் | கட்டளையொன்றுக்கு ரூபா 450,000/- |
| கட்டளைக் காலம் (Lead Time) | 3 - 4 மாதங்கள் |
| அலகொன்றின் வருடாந்த வைத்திருத்தல் கிரயம் | கொள்வனவு விலையில் 20 % |
| பயன்பாடு (Usage) | 150 - 400 அலகுகள் |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ). (03 புள்ளிகள்)

(b) மறு கட்டளை மட்டம். (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட B (தனியார்) கம்பனி** இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் ஒரு சேவைப் பிரிவையும் கொண்டிருக்கிறது.

(1) 2022 ஏப்ரல் மாதத்திற்காக கீழ்வரும் உற்பத்தி மேந்தலைக் கிரயத்தைக் கம்பனி மதிப்பிட்டுள்ளது :

| கிரய உருப்படி | கிரயம் (ரூபா) |
|---|---|
| இயந்திரம் மீதான தேய்மானம் | 24,000 |
| தொழிற்சாலை வாடகை | 350,000 |
| மேற்பார்வைக் கிரயம் | 120,000 |
| மின்சாரம் | 150,000 |
| **மொத்தம்** | **644,000** |

(2) மேந்தலைப் பகிர்வு அடிப்படை கீழே தரப்பட்டுள்ளது :

| விபரம் | அடிப்படை | உற்பத்தி | | சேவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி செய்தல் | பொதியிடல் | பராமரிப்பு | |
| பயன்படுத்தப்படும் தரைப் பரப்பு | சதுர அடி | 1,400 | 3,350 | 250 | 5,000 |
| ஊழியர்கள் | ஊழியர் எ/கை | 40 | 100 | 20 | 160 |
| இயந்திரப் பெறுமதி | ரூபா | 620,000 | 930,000 | 50,000 | 1,600,000 |
| மின்சாரம் | கிலோவாற்று | 1,000 | 300 | 200 | 1,500 |
| கிரயப் பகிர்வு – பராமரிப்பு | | 60% | 40% | | |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேந்தலைகள் எவ்வாறு ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் கூற்றொன்றைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட Z கம்பனியின் பணி இல. 100** தொடர்பாகப் பிரித்தெடுக்கப் பட்டவை ஆகும் :

| | |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 1,800 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 120/- விலையில் |
| நேர் கூலி | 300 மணித்தியாலங்கள் - மணித்தியாலமொன்று ரூபா 800/- வீதம் |
| உற்பத்தி மேந்தலைகள் | நேர் கூலிக் கிரயத்தில் 80 % |

கம்பனியானது கிரயத்தில் 15 % இலாபத்தைப் பேணுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**பணி இல. 100** தொடர்பில் அறவிட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட கோ லங்கா (தனியார்) கம்பனியின்** 2021 *மார்ச்* 31 *இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு :*

*(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (5,000,000 சாதாரண பங்குகள்) | | 250,000 |
| கைக்கொள் இலாபம் - 2020 ஏப்ரல் 01 இல் | | 108,000 |
| 12 % தனிச்சங்கள் | | 15,000 |
| மோட்டார் வாகனங்கள் | 75,000 | |
| அலுவலக உபகரணம் | 53,000 | |
| **திரள் தேய்மானம் - 2020 ஏப்ரல் 01 இல் :** | | |
| மோட்டார் வாகனங்கள் | | 19,000 |
| அலுவலக உபகரணம் | | 27,500 |
| வியாபார வருமதிகள் | 357,500 | |
| வியாபார சென்மதிகள் | | 287,425 |
| தொக்கு – 2021 மார்ச் 31 இல் | 189,841 | |
| வங்கியிலுள்ள காசு | 144,319 | |
| விற்பனைகள் | | 850,000 |
| விற்பனைக் கிரயம் | 603,500 | |
| விற்பனை அணியினருக்கான ஊக்கத்தொகை | 8,500 | |
| அலுவலக வாடகை | 1,125 | |
| விளம்பரப்படுத்தல் | 25,500 | |
| நீரும் மின்சாரமும் | 1,225 | |
| வங்கிக் கட்டணங்கள் | 560 | |
| தனிச்ச வட்டி | 900 | |
| சம்பளங்கள், EPF மற்றும் ETF | 95,744 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 27 | |
| 2019/20 ஆம் ஆண்டிற்கான வருமான வரி ஏற்பாடு | | 55 |
| செலுத்திய வருமான வரி | 3,055 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு - 2020 ஏப்ரல் 01 இல் | | 2,750 |
| செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF | | 66 |
| | **1,559,796** | **1,559,796** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | 5 ஆண்டுகள் |

(2) 2021 மார்ச் 20 இல், ரூபா 250,000/- பெறுமதியான ஒரு தொகுதி தொக்குகள் வெள்ளம் காரணமாக அழிவடைந்ததால் இந்தத் தொக்குகளை கணக்கேடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. காப்புறுதிக் கம்பனியினால் இந்தச் சேதத்திற்கான நட்டஈடாக (claim) ரூபா 160,000/- அங்கீகரிக்கப்பட்டதுடன் இது 2021 மார்ச் 31 இல் வருமதியாகவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித கணக்கீட்டுப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

(3) கோவிட் 19 காரணமாக ஏற்பட்ட வியாபாரத் தடங்கல்களைக் கவனத்தில் கொண்ட பின்னர், 2021 மார்ச் 31 இல் இன்னுமொரு ரூபா 560,000/- இனால் ஐயுறவுக் கடன் ஏற்பாட்டை அதிகரிக்க பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(4) மாதாந்த அலுவலக வாடகை ரூபா 75,000/-. 2021 மார்ச் 31 இல், கம்பனியானது மூன்று மாதங்களுக்கான வாடகையை முன்கூட்டியே செலுத்தியிருந்தது.

(5) வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான வருமான வரி ரூபா 55,000/- உம் வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரி ரூபா 3,000,000/- உம் ஆக மொத்தம் ரூபா 3,055,000/- ஆனது ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரி ரூபா 3,825,000/- என மதிப்பிடப்பட்டிருந்தது.

(6) 2020 ஏப்ரல் 01 இல் கம்பனியானது 12 % தனிச்சங்களை வழங்கியிருந்ததுடன் அதன் சம மதிப்பு (par value) தனிச்சமொன்றுக்கு ரூபா 100/- ஆகும். வட்டி ஆண்டிற்கு இரு முறை செலுத்தப்பட வேண்டும்.

(7) நிதிக் கூற்றுகள் வழங்கப்படுவதற்காக 2021 மே 31 இல் பணிப்பாளர் சபையால் அதிகாரமளிக்கப் பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட கோ லங்கா (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (13 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |